Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6
வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 } ஈரோடு, 23-12-1944 மார்கழி-மீ 9உ { மலர் 11

மானங்காக்க!

(மு. கருணாநிதி)

இந்நாட்டு இளந்தமிழா! இன எழுச்சியின் எதிரொலி எங்கெங்கு பரவியுள்ளதென்பதை நீ அறியமாட்டாயா? மானத்தை மறவா மரபையும், வானத்தை முட்டும் வீரத்தையும், நாணத்தகுந்த முறையில் நாசப்படுத்திய நஞ்சு உனது இளமை முதல் ஊட்டப்பட்டு வருவதையும், பாய்ந்த நச்சு, பையப்பைய உனது பெருமையைத் தேய்த்து வருவதையும் நீ உணரமாட்டாயா? ஆரம்பக் கல்வியிலே—அரிச்சுவடியிலே புகுந்த சாதிபேதம் ஆங்கில 'எம். ஏ.' பட்டம் வரையிலே பல வேடங்களில் புகுந்து திராவிடக் கலையை, திராவிட நாகரிகத்தை, திராவிட நாட்டைப் பறித்துக் கொண்ட முறை உனது எண்ணத்திற்கு எட்டவில்லையா? கருத்தரணின் கதவு திறக்கப்படவில்லையா? தச்சன் மேஜையை மாத்தாஸ் செய்தான். குயவன் பானையை மண்ணால் செய்தான். உழுவன் வயலை உழுது பயிரிடுகிறான், என்ற பாடத்தைப் படித்து அடுத்த பக்கம் புரட்டினால் அய்யர் பூஜை செய்கிறார் என்ற தொடரைக் காணுகிறாயே தோழனே! சிந்தித்தாயா சிதைந்த உன் சிறப்பை! விறை தொழிலாளத் தமிழனை 'அவன்' என்று அழைக்கிற அசம்பாவம் அய்யருக்கு மட்டும் 'அவர்' என்ற மகுடம் சூட்டி மகிழ்வானேன். சரித்திரத்தின் பெயரால் சதிசெய்ய இராமாயண பாரதங்கள் இன்றியமையாப் பாடமாகவும், கலையின் பெயரால் கம்பரும், சேக்கிழாரும் பாடமாக அமைந்துள்ள அநீதி அகலவேண்டாமா? வரலாற்றிலே, வையகம் சிலிர்க்க வாழ்ந்த வண்டமிழ் மன்னரின் விரிந்த சரிதம் நீ கண்டதுண்டா? வடநாட்டின் சரித்திரந்தான் திராவிடத்திற்குத் தேவையானதும் அவசியமானதுமாம்! தன்னைப் பற்றி அறிந்துகொள்ளாத தாங்கம்பீரமான் சென்னை சர்க்காரின் சிறப்பைத் தேடித் திரிவது வேடிக்கைச் செயல் தானே! விளையாட்டல்ல! இடித்த இரங்கத்தக்கது இனி!

முத்தமிழ் மொழி மழை பொழிந்த முதாம் எனக் கூறிடும் வித்தகரைக் கேட்கிறோம்; விஞ்ஞானத்திலே—பூகோளத்திலே—கணிதத்திலே—சரித்திரத்திலே—ஏன்? தமிழ் உரை நடையிலே வடமொழி வளர்ந்து செழித்த நிலையை நீ உணர்ந்தாயா என்று? அறிவைப் பாழாக்க அம்மையப்பன் திருவிளையாடல்! மானத்தைக் கருவறுக்க மகாத்மாவின் லீலைகள்! தோடுடைய செவியன் என்ற விடமேறி நாராயணனே ரெம்பாவாய் என்று முடியும் செய்யுள் நடைகள்! இவைதானே நீ கண்ட விஞ்ஞான விளக்கம்! பள்ளிப் பாடங்களிலே ஒன்றுக்கொன்று முரணாவதைக் காணும் ஆராய்ச்சி வேண்டாமா? இரணியாக்ஷன் பூமியைப் பாயாக சுருட்டிய கதை தமிழ்ப் பாடத்திலும், உலகம் உருண்டை என்பதற்கு ஆதாரம் பூகோளத்திலும்; பூமி தட்டையல்ல என்றுணர்த்திய கலிலியோ வரலாறு சரித்திரத்திலுமாக எனைப் பல செய்திகள் செந்தமிழ்நாட்டு மூளைகளில் சிந்தனை விதையைத் தூவவில்லையா?

இந்த ஆபாசங்களைக் கண்டுதான் மாணவர் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. சிந்தனையின் முடிவுதான் திராவிட மாணவர் கழகம்; இந்தக் காரணங்கள் மட்டுமல்ல இளந்தமிழர் எழுச்சிக்கு! இன்னும் பல உண்டு! கம்பர் காலந்தொட்டு கதிரேசர் காலம் வரையிலே, சேக்கிழார் காலந்தொட்டு சேதுப்பிள்ளை காலம் வரையிலே வாழ்ந்து வரும் புராணிகம் போசுக்கப்படப் பொங்கியது இந்த எழுச்சி! இந்த எழுச்சி விழுப்புண்ணுற்றுத் தீரவிடாது. தண்டவாளங்களையும், தபால் நிலையங்களையும் தகர்த்தெறிந்து மரணவரை அடக்க உதவிடும் அவைகளது, உண்மை கண்ட உள்ளங்களின் உத்வேகத்தால் தாக்கப்பட்டு உருவெடுத்து "உதைப்பார் [illegible] கொள்ளாதே" என எக்காளமிடும் ஆத்மாவியார் வேண்டு அன்பர்களின் [illegible] எட்டாத் தெருவீடாக [illegible]

பாமரமக்களும் ஜஸ்டிஸ்கட்சியும்

ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா,

நாங்கள் வடஆற்காடு மாவட்டத்தில் திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறோம். இதனால் எங்களுக்கு பல தரப்பட்ட மக்களிடம் பழகி அவர்கள் மனப்போக்கை அறிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

ஜஸ்டிஸ் கட்சி என்றால் தமிழில், நீதிக்கட்சி என்ற சிறந்த பொருள் இருந்தும் பாமர மக்களிடையேயும் சிறிது அரசியல் அறிவு உடையவர்களிடையேயும்கூட ஜஸ்டிஸ் கட்சி என்பது மிகவும் பிற்போக்கான கட்சி என்றும், தேசத்துரோக கட்சி என்றும், வெள்ளையனுக்குக் காட்டிக்கொடுக்கும் கட்சி என்றும் கருதப்பட்டு வருகிறது.

கட்சியின் கொள்கைகளை எவ்வளவு விளக்கமாக அவர்களுக்கு எடுத்துக் கூறினும் பயனில்லை. ஆகையால் நமது கட்சிக்கு ஜஸ்டிஸ் கட்சியின் பெயரை ஒட்டிவைத்திருப்பதால் உண்டாகும் நன்மையைவிட தீமையே அதிகமாக இருக்கிறது.

ஆகையால் இனிமேல் திராவிடர் கழகம் என்று மட்டும் பெயர் இருந்தால் நமது கட்சியில் அதிக அங்கத்தினர்கள் சேருவார்கள் என அபிப்பிராயப்படுகிறோம்.

இங்ஙனம்,
சா. சுப்பிரமணியயன்,
இரா. கண்ணன்,
நா. செங்குட்டுவன்,
அ. கரிகாலன்,
தா. குலசேகரன்,
தமிழர் கழகம், வேலூர் (வ. ஆ.)

தொழும்பு தோழர் பி. பி. முத்துமல்லரால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

எண்ணி நினைக்கும்படியான பாட்டின் ஒன்று திராவிடநாடு [illegible] பிறந்தால் இக் கிளர்ச்சி [illegible] அடங்கவேண்டும்! ஆகவேதான் முத்தமிழ் மாணவரே வருக! [illegible] மானம் காக்க!

திருமணங்கள்

திருப்பூர் பிரபல தோழர் எஸ். சுப்பையசெட்டியார் குமாரர் தோழர் எஸ். சஞ்சீவிக்கும் கோயமுத்தூர் எஸ். கோபாலகிருஷ்ணசெட்டியார் குமாரத்தி தோழர் ஜெயாவுக்கும் 27-11-44ந் தேதி கோயமுத்தூர் டாக்டர் பி. வ. நடேசன் பங்களாவில் பார்ப்பனப் புரோகிதமும் எவ்வித மூடச்சடங்குகளுமின்றி திருமணம் சிறப்பாய் நடைபெற்றது. திருப்பூர், கோவை முதலிய இடங்களிலிருந்து முக்கிய பிரமுகர்கள் ஏராளமாக வந்திருந்தனர். 'குடி அரசு' 'திராவிடநாடு' ஆகியவைகளுக்கு முறையே ரூ. 5 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

காரைக்கால் தோழர் முனியனாண்டிக்கும் தென்னம்புலம் தோழர் குஞ்சம்மாளுக்கும் சுயமரியாதைத் திருமணம் 6-12-44ந் தேதி திருத்துறைப்பூண்டி தாலூகா தென்னம்புலம் தோழர் எஸ். கே. எஸ். இலக்குமணன் இல்லத்தில் தோழர் வீ. சுப்பையன் தலைமையில் நடைபெற்றது. 'குடி அரசு' 'திராவிடநாடு' ஆகியவைகளின் வளர்ச்சிக்காக ரூ 1. நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சாத்தான்குடி. சண்முகபுரம் தோழர் பெருமாள் நாடார் புதல்வன் தோழர் பொன்னையாவுக்கும், ஆறுமுகனேரியைச் சேர்ந்த கட்டாலிபுரம் தோழர் பி. பெரியசாமி நாடார் புதல்வி தோழர் அன்னப்பழத்துக்கும், தோழர் பி. எஸ். சண்முகம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடந்தேறியது. இதை முன்னிட்டு 'குடி அரசு' 'திராவிடநாடு' ஆகியவைகளுக்கு ரூபாய் ஒன்று வீதம் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சேலம், குகை, தோழர் எ. குருநாத செட்டியார் குமாரத்தி கமலாவுக்கும், சேலம் கொண்டலாம்பட்டி தோழர் ராமசாமி செட்டியார் குமாரன் சிவன் கடாட்சத்திற்கும் 27-11-44-ந்தேதி மணமகள் இல்லத்தில் திருமணம் நடந்தது.

* *

அம்மையப்பன், எலந்துடி தோழர் கோவிந்தசாமி புதல்வி தோழர் செயலக்ஷ்மிக்கும், திருவாரூர் வடபுரம் தோழர் எஸ். பெரியசாமி தஞ்சாயர் புதல்வன் தோழர் சேதுபதிக்கும் 26-11-44-ல் திருமணம் நடந்தது. இதன் நினைவாக இயக்கப் பத்திரிகைகளுக்கு ரூ. 1 வீதமும், திருவாரூர் திராவிட கழகத்திற்கும், முரசொலி கழகத்திற்கும் ரூ. 2 வீதமும் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சிதம்பரம் தோழர் அப்புசாமி பிள்ளை மகன் தங்கவேலுக்கும் தோழர் இராஜா 1ாயுடு மகள் அமிர்தவல்லிக்கும் 30-11-44-ஆம் தேதி புலவர் ரா. மு. மாணிக்கம் அவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தது. இத் திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு'க்கும் இளங்கோ மன்றத்துக்கும் முறையே ரூ. 1 வீதம் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சாத்தான்குடி தோழர் கே. வெற்றிவேல் தலைமையில் தோழர்கள் எஸ். சிவனணைந்த பெருமாளுக்கும், செல்லம்மாளுக்கும் 12-11-44-ஆம் தேதி சீர்திருத்தத் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. இதை முன்னிட்டு 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சாத்தான்குடி சா. வ. டி. பி. ருசபசார்ந்த வாலிபர் சங்க ஆதரவில் 4-12-44-ஆம் தேதி தோழர்கள் முத்தையாவுக்கும் பெருமாள் அம்மாளுக்கும் தோழர் பீ. எஸ். சண்முகம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. மணமக்களால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

கோவில்பட்டி தோழர் என். எஸ். அண்ணாமலை மைத்துனர் தோழர் எ. துரைச்சாமிக்கும் சங்கரபுரம் தோழர் தங்கசாமி நாடார் மகள் தோழர் சீனியம்மாளுக்கும் 1-12-44-ந் தேதி தோழர் என். கே. எ. பால்ராஜ் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தது. இதன் நினைவாக இயக்கப் பத்திரிகைகளுக்கு ரூ. 1 வீதம் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

கள்ளுப்பட்டி நாட்டாண்மை தோழர் எ. வ. காமாட்சி கவுண்டர் குமாரர் தோழர் ஆண்டவேலுக்கும், தோழர் எ. உ. வீரபேதநிய கவுண்டர் குமாரத்தி தோழர் வீருசாகம்மாளுக்கும் 22-11-44-ந் தேதி மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக இயக்கப் பத்திரிகைகளுக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

மேட்டூர் தோழர் இராமசாமிக்கும், தோழர் கருப்பாயிக்கும் ராமக்கல்லில் திருமணம் நடந்தேறியது. இயக்கப் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு ரூ. ஒன்று நன்கொடை அனுப்பப்பட்டது.

* *

கோவில்பட்டியைச் சேர்ந்த பூசாரிபட்டியில் தோழர் சுப்பையா நாடார் மகன் தோழர் ராமசாமிக்கும் தோழர் செல்லத்தாய் அம்மையாருக்கும் "மறுமணம்" சீர்திருத்த முறையில் திருமணம் 27-11-44ந் தேதி நடந்தது. இதன் நினைவாக இயக்கப் பத்திரிகைகளுக்கும் கழகங்களுக்கும் முறையே ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

* *

கடலூர் திராவிடர் கழகச்செயலாளர் தோழர் வள்ளலாருக்கும் பாகூர் தனலட்சுமி அம்மையாருக்கும் அண்ணாமலை பல்கலைக்கழக தமிழாசிரியர்கள் வெள்ளைவாரணர், ஔவை துரைசாமி ஆகியோரைக்கொண்டு ஆரிய முறை ஒழிந்த சீர்திருத்தத் திருமணம் 4-12-44ந் தேதி நடைபெற்றது. அன்று மாலை கடலூர் வழக்கறிஞர் கே. வெங்கடாசலம் பிள்ளை தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அன்பழகன், இளவழகன், வீரமணி, இராமச்சந்திரன், துரைசாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

* *

இலஞ்சி தோழர் ஈ. எஸ். சிதம்பரம் பிள்ளை பி. ஏ. பி. எல்., அவர்கள் மகள் தோழர் சாரதாவுக்கும் குலசேகரன்பட்டினம் தோழர் தி. சு. அறம்வளர்த்தநாத பிள்ளை அவர்கள் தம்பி இராஜ்சாகிப் தி. சு. பழனியப்பபிள்ளை அவர்கள் மகன் தோழர் தி. ப. சண்முக சுந்தரம் (B. Com) க்கும் 4-12-44ந் தேதி மணமகள் இல்லத்தில் திருமணம் நடந்தது.

திராவிடத் தோழா இன்னுமா உறக்கம்?

நமது இயக்கம் என்றுமில்லா விழிப்படைய நம் திருச்சி ஜில்லாவே முதல் காரணம். இந்தி எதிர்ப்பிலும், தென்னிந்திய இரயில்வே போஜன விடுதியில் அக்ரகாரக் கும்பல்கள் பாரபட்சமாக நடந்ததை எல்லோரும் ஓர் இனம் என்னும் பழமொழியை மெய்ப்பித்துக் காட்டியதும் திருச்சியே. சேலம் மாநாட்டிலே அதிகார மமதையும், வீண் டம்பமும் பொறாமையும் கொண்ட ஓர் கூட்டம் நமது பெரியாரை கவிழ்க்கவும் நமது புனித கட்சியைப் பயன்படுத்தி பட்டம் பதவி பெறக்கொண்டு அலையும்போது நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றும், செய்வது ஒன்றுமாக அவர்களை ஆக்கிவிடச்செய்து, அவர்களே, நமது திராவிட நாட்டின் முதல் தலைவர் பெரியார் தான் என்று அலறவைத்தது திருச்சி ஜில்லாவன்றோ. ஆகையால் தோழர்களே நமது திராவிடநாட்டின் தலைவர் கட்டளையை மதித்து நமது திராவிட கழகத்தில் சேர திராவிட தோழர்களாகிய நமக்கு இவ்வளவு உறக்கமா? உறக்கம் போதும் விழிப்படையுங்கள். திருச்சி ஜில்லா நம் மாகாண கழகத்திற்கு அங்கத்தினர் எண்ணிக்கை முதன்மையாக இருக்க ஆவல்கொண்டு ஆவன செய்ய முன்வரும்படி தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். விழியின், திராவிடம் நமதே.

கே. துரைஅரசு,
மே. க. கோட்டை.

பொத்தனூரில் பெரியார் பேசிய 3 மணி நேரப் பேச்சின் சுருக்கம்

(எஸ். கருணானந்தம் சுருக்கியது)

"இன்று நமக்குள்ள தாசக் கொடியானது இந்நாட்டின் எங்கும் காணப்படுகின்ற கொடுமைகளையும், அநீதிகளையும், பேத முறைகளையும் ஒழித்து, ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வில்லை என்னும் சமநிலையைக் காட்டுவதற்கு அறிகுறியாக விளங்குகிறது எனலாம். இந்தக் கொடியின்கூட மாறுதல் ஏற்படலாம். ஏனென்னில், இதுவரையில் நமக்குப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கமானது பழைய சர்க்காரைப்போல "எங்கள் உரிமைகளை எங்களுக்கு வழங்குங்கள். எங்களுக்கும் பட்டம், பதவிகளை அளியுங்கள்" என்று வேண்டுகிற முறையில் அமைந்திருந்தது. இப்பொழுதோ அதே சங்கத்தின் பேரால் அந்த நிலை மாறி பிறருக்கு அவரவர்களுடைய உரிமைகளை வழங்குகின்ற முறையில் நாம் திட்டம் வகுத்துக் கொண்டோம். நம்மையும், நம் இனத்தையும், நம் நாட்டையும் உணர்ந்துகொண்டோம். அதன் பலன்தான் இன்றைய தினம் தெ. இ. ந. உ. சங்கத்தை திராவிடர் கழகம் என்று சொல்லுகிறோம். திராவிடர் கழகம் தொடங்கியதானது நம்நாட்டு முழுப்பங்கையும் அடைந்து, மற்றவர்களுக்கு அவரவர் பங்கைத் தகுதிப்படி வழங்குவதற்கு போராட்டம் தொடங்கியது என்றே கூறலாம். போராட்டம் என்றதும் சிலர் அஞ்சலாம், ஆனால் போராட்டம் நமக்குப் புதிதல்ல. யாராவது கூறட்டும் இந்நாடு எக்காலத்திலாவது போராட்டமின்றி சமாதானமாய் இருந்தது என்பதை. ஆதிமுதல் இன்றுவரை எதிலும் போராட்டந்தான். முதலில் உண்டானதாகக் கூறப்படும் ஆரியருடைய நான்கு வேதங்கள் என்ன? ஆரிய-திராவிடர் போராட்டம், தேவர்-அசுரர் போராட்டம் தானே! இதிகாசங்களில் கூறுகிற விஷ்ணுவின் பத்து அவதாரகாரணங்கள்தான் என்ன? அவையும் ஆரிய-அரக்கர் போராட்டம்தானே! கந்தப்புராண கந்தன்-சூரன்போராட்டமும் அதுபோல்தானே? அவை போகட்டும், இந்த நாட்டுச் சரித்திரத்தின் நிலைதான் என்ன? அதுவும் அப்படியேதான்; அதாவது ஆரியமதம்-புத்தமதம்; பிறகு இந்து-முஸ்லிம்தான். ஆகவே மதத்தின்பேராலும், கடவுளின் பேராலும் நிகழ்ந்துவந்த போராட்டங்கள் எத்தனையோ உண்டு. இன்று காண்பது புதிதல்ல என்கிறோம். இந்தத் தொல்லைகளை ஒழிப்பதற்கு பழய முறைகள் அல்லாமல் நாகரிகமான முறையிலே சிந்தனை செய்ததன் பலன்தான் திராவிடர் கழகமாகும்.

சென்ற காலங்களில் இந்தத் தொல்லைகளைத் தொலைத்து உரிமைகளைப் பெறுவதற்காக நம்மவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எத்தனையோ, இன்று மட்டுமல்ல எவ்வளவோ காலமாய் நமது முன்னோர்கள் அரும்பாடுபட்டார்கள். காங்கரஸ் சபை உண்டாக்கி சத்தியாக்கிரகம் நடத்தினார்கள். வேளை தவறாது கோவிலுக்குச் சென்று முறைப்படி கும்பிட்டு வந்தார்கள். கவர்மெண்டோ, கடவுளோ இன்று வரை கவனித்ததாகத் தெரியவில்லை.

நாம் பாடுபடும் மக்கள், நாம் உழைப்பாளிகள், நம் கையினால் செய்த பொருள்களே இன்று உலகத்தில் உள்ளன. நம் பாடுகளே இன்று உயர்வாக இருக்கின்றன. இதுமாத்திரமா! நம்மைப் படைத்ததாகக் கருதப்படும் கடவுளைக் கூட நாமே செய்தோம், செய்கிறோம், அவைகளை காப்பாற்றியும் வருகிறோம். அப்படியிருந்தும் நம்முடைய நிலைமை என்ன? நம்முடைய உரிமைகள் எங்கே? இன்று நமக்குள்ள இழிவுகள் எவ்வளவு? கொஞ்சமா? இத்தனை காலமாகப் பிறர் நமக்குச் செய்வார்கள் என்று நம்பியிருந்தோம். ஏமாந்தோம். ஆகவே இனி நாமே வழங்குவோம் என்று கிளம்புகிறோம். இந்த நாட்டுக் கடவுள்களைப் போலவே காங்கரசும் பாமர மக்களிடையே செல்வாக்கும், மதிப்பும், பெருமையும், நம்பிக்கையும் பெற்றது. ஆயினும் இன்றைய வரையிலே இந்த இரு கூட்டத்தாரும் செய்ததென்ன என்பதை யோசிக்கும் பொழுதுதான் இந்த நிலையிலே ஒரு மாறுபாடுவேண்டும், ஒரு புரட்சி தேவை என்கிறோம். எதற்காகப் புரட்சி? இன்றுள்ள இழிவுகள், குற்றங்கள், அக்கிரமங்கள் ஒழிவதற்காக. இவைகளுக்கு இருப்பிடங்கள் யாவை, காரண கர்த்தர் யார் என்பதை உணரவேண்டும். உணர்ந்து அவற்றை அழிப்பதற்கு ஆவன செய்யவேண்டும். இவைகளைக் கூறினால் நம் பெரியவர்களுக்குக் கோபம் வந்து நமக்கு நாஸ்திகர், வகுப்புத் துவேஷி என்கிற பட்டமளிக்கின்றனர். காலைய வரையின் காப்பி ஓட்டலில் உள்ள பேதம் ஒழியவில்லை. உண்மையைக் கூறினால் இவர்களுக்குக் கோபம் வருகிறது. இவர்களை சூத்திரன் என்றும், பார்ப்பன தாசர் என்றும், வைப்பாட்டி மக்கள் என்றும் அவர்கள் கூப்பிடுவது கூட இவர்களுடைய விஷயத்தில் சரிதான் என்றே படுகின்றது.

எங்களுக்குப் பார்ப்பனர் மீதோ கடவுள்கள் மீதோ த்வேஷமா? அல்லது கொடுமையா? உலகம் எவ்வளவு விரைவாக முன்னேறி வருகிறது! மணிக்கு நாலு மைல் நடந்தவன் ஆகாயத்தில் நானூறு மைல் வேகத்தில் பறக்கிறான், மணிக்கு 4-மைல் போன சேதி, மணிக்கு 4000 மைல் பேசுகிறது. மற்றும் வேசம் டம், ரேடியோ முதலிய அதிசயங்கள், அற்புதங்கள் எத்தனை இருக்கின்றன. நாம் மட்டும் சாலையில் கண்ணை மூடிக்கொண்ட காட்டுமிராண்டி வழக்கத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். இன்னும் சூத்திரர்களாகவே பறையர்களாகவே இருக்கிறோம். இதற்குச் சாதகமானவை எதாயிருந்தாலும் ஒழிந்தால்தானே முன்னேற முடியும்? இவ்வளவு அறிவும் ஆராய்ச்சியும் நிரம்பிய காலத்தில்கூடத் தோலைக் கட்டிக்கொண்டு, சாம்பலைப் பூசி, எலும்பை அணிந்து, கையில் அரிவாளுடன், காலின்கீழ் மனிதனை மிதித்துக்கொண்டிருக்கும் ஒரு காட்டுமிராண்டி காலத்துக் கடவுளைக் கும்பிடலாமா? இன்றைய நிலைமைக்கு 6000-மைலுக்கு அப்பாலுள்ள லண்டன், நியூயார்க், பெர்லின், பாரிஸ், டோகியோ முதலிய எந்த ஊரையும் ஒரு சிறு பொத்தானைத் திருகுவதன் மூலம் நேரில் கேட்கவைக்கின்ற ரேடியோவையல்லவா, அதைச்செய்தவனை யல்லவா கடவுளாகக் கும்பிடவேண்டும்? அந்த அறிவைப்பெற வல்லவா முயற்சிக்க வேண்டும். காலத்திற்கேற்ப நம்மைத் திருத்திக்கொள்ள வேண்டாமா? இதைக்கூறினால் தவறா? இந்த விஷயத்தில் மாத்திரம் சமயத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றிக்கொள்ளக்கூடாது; பெரியபுராணம் ராமாயணம் ஓத படிப்பதில் மட்டும் சமயத்துக்கும், இடத்துக்கும் தக்கபடி அருத்தம் மாற்றிக்கொள்ளலாம் என்றால் என்ன நியாயம்? இதிகாச புராணங்களை குறைகூறியவுடன் இன்றைக்கு நாட்டில் ராமாயணம், கீதை படிப்பது அதிகமாகி வருகிறது. டாக்டர் அம்பேத்கார் கூறியபடி கீதையை ஒரு மத நூல் என்பதைவிட ஒரு ஜாதியின் ஆதிக்கத் தந்திர நூல் என்று சொல்லலாம். ஒரு பக்கத்தில் "நானே எல்லா ஜீவனுக்குள்ளும் பேதமின்றி நிறைந்திருப்பவன்" என்றும், மற்றொரு பக்கத்தில், "நானே பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நால் வருணங்களை உண்டாக்கி, சூத்திரரைப் பிறருக்கு அடிமையாக்கினேன். ஆகையால் அவன் அடிமையாகவே இருக்க வேண்டும்" என்றும் கூறுவதுதானே கீதை? இதைப்படிப்பது பக்தியாவென்று எடுத்துக் கூறிவிட்டால், அதைத் தவறு, பாபம் என்று சொன்னால் அது என்ன நீதி என்று கேட்கிறோம்?

இந்த நாட்டு அறிவாளிகள், பக்தர்கள், புலவர்கள் நாளையவரையில் "எது கடவுள்?" என்பதற்கு என்ன கூறினார்கள்? இவர்களால் என்ன கூற முடியும்? கடவுளைப் பற்றி எல்லாம் அறிந்தவர் போலவும், அவனுக்கு நேரான வாரிசுக்காரர் போலவும் பேசுகின்றனரே, கடவுளையே கேட்டுப் பார்த்திருப்பார்களா? இன்றைய தினம் வரையில், உனது உருவ அருமானம் எவ்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

வேண்டுகோள்

நெல்லை மாவட்டத் திராவிட
தோழர்களே,

மற்ற மாவட்டங்களில் ஆயிரக்கணக்கில் அங்கத்தினர்கள் சேர்ந்திருக்க நமது மாவட்டத்தில் இன்றுவரை 1000-அங்கத்தினர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறதென்றால், நமது நெல்லை மாவட்டத்திற்கு ஏற்படும் அவமானம் நமக்கில்லையா? நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக தூத்துக்குடியில் மாத்திரம் 5000 அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டாமா? நமது மாபெருந் தலைவர் பெரியார் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் நமதியக்கத்திற்கு தூத்துக்குடிதான் முக்கிய இடம்—திராவிடர் கழகத்திற்கு தூத்துக்குடிதான் என்று பலதடவை பேசி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று நமதியக்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் பணியில் தூத்துக்குடி மிக மோசமான நிலைமையில் இருப்பதை பார்க்கும்போது நமக்கு இன்னும் (இன எழுச்சி) தன்மான உணர்ச்சி இல்லை யென்றுதானே அர்த்தமாகும்? தன்மான உணர்ச்சி கொண்ட திராவிட தோழர்களே? எங்கே பார்ப்போம் உங்கள் வேலையை? டிசம்பர்மாத இறுதிக்குள் நமது மாவட்டம் மற்ற மாவட்டங்களைவிட முன்னணியில் நிற்பதற்கும்; சேலம் மாநாட்டில் தீர்மானித்த ஸ்பெஷல் மாநாட்டை நமது மாவட்டத்தில் கூட்டுவதற்கும் விரைந்து பணியாற்ற வருமாறு பணிவுடன் அழைக்கிறேன்.

தூத்துக்குடியில் திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினராக சேர்ந்தவர்கள் உடனே கீழ்க்கண்ட இடங்களில் அங்கத்தினராக பதிவுசெய்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1. திராவிட இளைஞர் கழகம்,
 மேலச்சண்முகபுரம், தூத்துக்குடி.
2. சி. அ. சி. சண்முகம்,
 பலசரக்கு கடை, சண்முகபுரம்,
 சிவந்தாகுளம்ரோடு, தூத்துக்குடி.
3. சர் ஏ. டி. பன்னீர் செல்வம் சங்கம்,
 கீழச் சண்முகபுரம், தூத்துக்குடி.
4. வடக்கூர் திராவிடர் கழகம்,
 தூத்துக்குடி.
5. வடக்கூர் வ. பு. அ. சௌந்திர
 பாண்டியன் சமதர்ம சங்கம்,
 தூத்துக்குடி.
6. நகர் திராவிடர் கழக செயலாளர்
 தோழர் அம். எஸ். சிவசாமி,
 டிஸ்மெர்ச்செண்ட்.
7. அண்ணாதுரை திராவிட
 இளைஞர் கழகம்,
 சவர்குமாம் தெரு, தூத்துக்குடி.
8. தமிழர் சமதர்ம சங்கம்,
 தமோதர நகர், தூத்துக்குடி.

எஸ். குருசாமி,
கூட்டுச்செயலாளர் தெற்கு டிவிசன்,
திராவிடர் கழகம், தூத்துக்குடி.

* *

திருவாரூரில் வாழ்கின்ற திராவிடமக்கள் திராவிட கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்வதோடு, குடிஅரசு, தூங்கா மொழி, அன்னை புதூர், மருங்கூர் இரவி புதூர் முதலிய தோழர்கள் அவசியமுள்ள அங்கத்தினர் புத்தகத்திற்குக் கீழ் காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்

கே. மதியழகன்,
நாடக ஆசிரியர்,
கோட்டாறு.

* *

மதுரைமாவட்டத் திராவிடத்
தோழர்களே!

ஏனைய மாவட்டங்களில் நம் திராவிடர் கழகத்திற்கு ஏராளமான உறுப்பினர்கள் சேர்ந்து கழகங்கள் நிறைந்திருப்பது கண்டும் நாம் வாளாவிருப்பது நீதியாகுமா?

தலைமை நிலையத்திலிருந்து ரசீது புத்தகங்கள் பெற்றிருக்கும் தோழர்கள் இதுவரை சேர்த்த ரசீதுகளையும் தலைமை நிலையத்திற்குச் சேரவேண்டிய தொகையையும் உடனே அனுப்பி விட்டு மேற்கொண்டு அங்கத்தினர்கள் சேர்க்கவும் கழகங்கள் திறக்கவும் ஒத்துழைக்கும்படி வேண்டுகிறோம்.

அங்கத்தினர்கள் சேர்க்கும் ரசீது புத்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். சி. முத்திருளாண்டி, தன்மதிப்பு இளைஞர் மன்றம், 55 D. புட்டுத் தோப்பு ரோடு, மதுரை.

பி. பொன்ராமன், திராவிட நியூஸ் ஏஜண்டு, 295, கீழமாசி, மதுரை.

சி. முத்திருளாண்டி.

* *

புதுக்கோட்டைத் தோழர்களே!

திருவாங்கூர், மைசூர் போன்ற தனியரசு மக்கள் ஏராளமாக அங்கத்தினர்கள் சேர்ந்து விட்டனர். ஆனால், நம் தனித் தமிழரசும், தனியரசுமாகிய புதுக்கோட்டையில் ஒரு நூறு பேர்கள் கூட சேர்க்கப்படவில்லையென்றால் எவ்வளவு அவமானம்! பக்க வேர்கள் பலமிழந்து விட்டதை உணர்ந்த ஆரியம், ஆணி வேர், பார்ப்பனீயக் கோட்டையாகிய புதுக்கோட்டையில் வேரூன்றி இருப்பது கண்டு களிக்கலாம், நாம் ஆரியத்தால் அல்லலுற்றது போதும், தோழர்களே! இனியேனும் எழுங்கள்; ஆரியத்தின் ஆணிவேரை அடியோடு பெயர்த்தெறிய முன் வாருங்கள், திராவிடர் கழகத்தில் சேருங்கள்! ஆரியத் தமிழ் நாடாக உள்ள புதுக்கோட்டையை தன்மானத் தமிழ் நாடாக்க ஒன்று சேருங்கள்! டிசம்பர் மாதத்திற்குள்ளாக நாம் 200 அங்கத்தினர்களையாவது சேர்க்கவேண்டாமா? சுற்றுவட்டாரத் தோழர்களை ஊக்கத்தோடு பெரிதும் ஒத்துழைக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். அங்கத்தினர்கள் சேர்க்கும் புத்தகம் விரும்பும் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

முகவரி:

இராம. கலியாணசுந்தரம்,
C/o அறிவு வளர்ச்சிக் கழகம்,
கீழராச வீதி, புதுக்கோட்டை.

'திராவிட மணி' ஆசிரியர் அறிக்கை

"திராவிட மணி" ஆசிரியர் தோழர் டி. எம். முத்து பின் வருமாறு எழுதுகிறார்:-

அசல் கட்சி—ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் சிலரின் கூச்சல் இப்போது சிறிது பிரமாதமாக காணப்படுகிறது. சர்க்காரும் கட்சியின் எதிரிகளும் இதை நம்புவதே போல் காட்டி நடந்து கொள்ளுகிறார்கள்.

சிர்ப்பந்த கூட்டாளிகளாய்ச் சேர்ந்து கொண்டிருக்க வேண்டிய இவர்கள் அடையாறு திருவல்லிக்கேணி கடற்கரைகளிலும் காங்கிரஸ்காரர்களிடமும், பனோட்டா ஓட்டல் அறைகளிலும் கட்சி எதிரிகளிடம் ரகசியமாய்ப் பேசி ஒப்பந்தம் செய்து கொண்டு, முஸ்லிம் மக்களில் இரண்டொருவரை விலைக்கு வாங்கி பெரியாரைப் பற்றியும் அவர் தம் கூட்டத்தினரைப் பற்றியும் விஷமங்கள் செய்ய ஏவி விட்டிருப்பதோடு, தாழ்த்தப்பட்டோர்—கிருஸ்தவ மக்களிடையும் இதைச் செய்ய முயற்சித்து வருகிறார்கள். மற்றும் ஒருவர் மாற்றி மற்றொருவர் மே. த. கவர்னர் பெருமான் அவர்களைப் பேட்டி காண்பதும், அந்த வேஷத்தை மற்ற ஆலோசகர்கள் போன்ற மானமுள்ள சர்க்கார் அதிகாரிகளிடத்து நடந்துகொண்டு, தவறாய் ஆத்திரமூட்டி பெரியார்—அவர் தம் குழுவினர் மீதும் திருப்பிவிட்டு, தொல்லை கொடுக்கப் பார்க்கிறார்கள். ஆகையால், திராவிட கழகம்—ஜஸ்டிஸ் கட்சிக்கு அப்படிப்பட்ட "சிர்ப்பந்த கூட்டாளிகள்" சம்மந்தமற்றவர்களென்றும், அவர்களுக்கு பொது மக்களிடம் சம்மந்தமோ—செல்வாக்கோ இல்லை என்றும், மற்ற மக்களுக்கும் எடுத்துச் சொல்லி, தீர்மானங்கள் மூலமாக மாகாணத்திலுள்ள திராவிட கழகங்கள் அனைத்தும், மே. த. கவர்னரவர்களுக்கும் மற்ற ஆலோசகர் போன்ற மானமுள்ள அதிகாரிகளுக்கும் அறிவித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளுகிறேன்."

திருவள்ளுவர் தொண்டர் மாநாடு

ஷெ மாநாட்டை வரும் பிப்ரவரி மாத இறுதியில் திருச்சியில் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான தொடக்கக் கூட்டம் இம்மாத இறுதியில் முன்னறிவிப்பின் பேரில் கூட்டப்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

பொத்தனூரில் திராவிடர் கழகத் திறப்பு விழா

சேலம் வேலூரையடுத்த பொத்தனூர் ஒலிபெருக்கி நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலுக்கு 17-12-44 காலை 10-30 மணிக்கு பெரியாரும் பிறதோழர்களும் மேளத்துடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். வழி நெடுகப் பல இடங்களில் பெரியாருக்கு மாலைகள் இடப்பட்டன.

பெரியாரவர்களைத் திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்குமாறு தோழர் மணிவாசகம் முன்மொழிய, தோழர் சிவப்பிரகாசம் அதை வழிமொழிந்தார். தோழர் கருப்பன் பாடினதும், பெரியார் தலைமையேற்றார். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) கொடியேற்றி வைத்தார். தோழர் பி. ஜனார்த்தனம் பி. ஏ., கழகத்தைத் திறந்துவைத்தார். தலைவர் பின்னுரையுடன் முற்பகல் கூட்டம் 1-30 மணிக்கு முடிவடைந்தது.

தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் வீட்டில் இடைவேளை உணவு ஆன பின்னர், பெரியாரும் மற்றவர்களும் வேலூர் சென்றனர். அங்கு கண்டர் உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சார்பாக, மானேஜர் தோழர் பரிமளகண்டர் பெரியாருக்கு மாலையிட்டு வரவேற்றார். அதன் பின் தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் சேலம் கல்லூரிப் புலவர் தேவநேயப் பாவாணர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

மாலை 7 மணிக்கு பொத்தனூரில் தோழர் வி. முத்துசாமி பி. ஏ., பி. எல்., தலைமையில் தோழர் ஜனார்த்தனம், பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் கே. பி. சின்னராசு, தவமணி இராசன், நெடுஞ்செழியன் ஆகியோர் விரிவுரையாற்றியதும், தோழர் மணிவாசகம் நன்றி கூற கூட்டம் இரவு 10-30-க்கு இனிது முடிந்தது. சுமார் ஆயிரம் மக்களுக்கு மேல் குழுமியிருந்தனர். பெரியார் பேசுகையில் சில அன்பர்களின் வினாக்களுக்கு ஆணித்தரமான விடையளிக்கப்பட்டது.

சென்னை தமிழ் இசைச் சங்கம்

ஷை சங்கத்தின் இரண்டாவது சென்னைத் தமிழிசை விழா சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள செயின்ட் மேரிஸ் ஹாலில் 23-12-44-ந் தேதி சர் பி. டி. ராஜன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். 3-1-45-ந் தேதி வரை ஷை விழா நடைபெறும். நாடோறும் தக்கபக்க வாத்தியங்களுடன் தமிழிசை விருந்து நடைபெறும்.

போரின் கடுமை இனிதான் அதிகரிக்கப் போகிறது

பெரும் போர்கள் இனிதான் நடக்கவிருக்கின்றன

செஞ்சிலுவைக்கு

அதிக வேலை இருக்கிறது

எனவே,
தயவு செய்து இதை எண்ணிப்பார்த்து

★

மே. த. கவர்னரின்

யுத்த நிதிக்கு

('செஞ்சிலுவை' என்ற பெயரால்) மீண்டும்
தாராளமாகப்
பணங் கொடுத்துதவுங்கள்

அக்கினிச்சட்டி எடுப்பது தெய்வபலமா?

தென்பாதி அருகிலுள்ள வடக்கு வீரு தாங்கள் கிராமத்தார் சிலர் கோயில்களில் அக்கினிச்சட்டி தூக்கிக்கொண்டு ஆடுவதை தெய்வபலம் என்றும் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்றும் எங்களிடம் சொற்போர் நடத்திக்கொண்டு இருந்தார்கள். நாங்கள் அக்கினிச்சட்டி தூக்குவது வெறும் சூழ்ச்சி என்று நிரூபித்துக் காட்டுவதற்காக ஷை ஊரில் எ. சிங்காரவேல் இல்லத்தில் (கோயில்களில் எப்படி நெருப்புச்சட்டி தீ மூட்டி எடுக்கிறார்களோ அதைப்போலவே) நாங்களும் தீ மூட்டி எடுத்தோம். நெருப்புச் சுடவில்லை. இதைப் பொது ஜனங்கள் அறிவதற்காக தெருவெல்லாம் தூக்கிக்கொண்டு சுற்றிவந்தோம். ஜனங்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். தீச்சட்டி சுடாமலிருப்பது தெய்வ பலம் இல்லையென்றும், இது மக்களை ஏய்த்துப் பிழைக்கும் மடையர்கள் சூழ்ச்சி என்றும் விளக்கிக் காட்டினோம். சூழ்ச்சியின் காரணம், தீச்சட்டியின் அடியில் பச்சை நெல் உமியை பக்குவமாய் இடித்து மேலே தீ மூட்டி, பசு நெய்யையும் எண்ணெயையும் ஊற்றுவது தான் என்று தெளிவாக எடுத்துக் கூறினோம். பிறகு இவ்வூரின் தோழர்கள் செ. கோவிந்தசாமி, கு. கோவிந்தராசம் மற்றும் சிலரும் அங்கத்தினராகச் சேர்ந்தனர்.

பிரிவு

சென்னை குணை ஸ்ரீ பாரதி அச்சுக்கூடம் அண்டு விநாயகம் கம்பெனியின் உரிமையாளரும் தோழர் டி. இரத்தினவேலு தந்தையுமான தோழர் எஸ். துரைசாமி முதலியார் 14-12-44-ந் தேதி பிரிந்தார். 15-12-44-ந் தேதி மாலை குணை மயானத்தில் எரியூட்டுதல் நடைபெற்றது.

குடி அரசு

1944-ஆம் டிசம்பர்-மீ 23-உ

யாருக்குப் பரிசு?

திராவிடர் கழகத்திற்கு (ஜஸ்டிஸ் கட்சிக்கு) சேலம் மாகாட்டிற்குப் பிறகு இந்த மூன்றே முக்கால் மாதத்தில் 18500 அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 2 கோடி மக்கள் உள்ள தமிழ் நாட்டில் 18500 மெம்பர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் இது மொத்த ஜனத்தொகையில் ஆயிரத்திற்கு ஒன்று விதம் தான் ஆகிறது என்றாலும், சேலம் மாகாட்டில் 6 மாதத்திற்குள் 10000 அங்கத்தினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று ஏற்படுத்திய திட்டத்திற்கு மேலாக, அதாவது சற்றேறக்குறைய இரட்டிப்பான அளவுக்கு சேர்க்கப்பட்டாய் விட்டது என்பது மகிழ்ச்சிக்குரிய காரியமேயாகும்.

இவ்வளவு அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டிருந்தும் இனியும் மூன்று ஜில்லாக்களில் ஜில்லாவுக்கு 1000 அங்கத்தினர்கள் கூட சேர்க்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்க காரியமாகும். அதிலும் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த கனவான்களே ஜில்லா போர்டு பிரசிடெண்டாக இருந்து ஆட்சி செலுத்தும் ஜில்லாக்களான வட ஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை ஆகிய ஜில்லாக்களில் மாத்திரமே 1000 அங்கத்தினர்கள் சேர்க்கப்படாமல் இருந்துவருகின்றது என்றால் இதற்கு ஏதாவது காரணம் இல்லாமலிருக்குமா என்று யார்தான் சந்தேகிக்கமாட்டார்கள்?

எப்படி இருந்த போதிலும் சீக்கிரத்தில் அவற்றின் குறைந்த அளவு எண்ணிக்கைகள் பூர்த்தியாகிவிடலாம் என்பதில் சந்தேகமில்லை. இந்த டிசம்பர் மாதத்திற்கு இனியும் 8 நாட்கள் மீதி இருக்கின்றன. இந்த 8 நாட்களில் இந்த மூன்று ஜில்லாக்களிலும் உள்ள நமது நண்பர்கள் சிறிது முயற்சி செய்தாலும் இந்தக் காரியம் பூர்த்தி ஆகிவிடும் என்பதில் ஐயம் இல்லை. அந்தப்படி செய்வார்கள் என்றே கருதுகிறோம்.

மற்ற ஜில்லாக்களில் இருப்பவர்களும் தொடர்ந்து வேலை செய்து இம்மாத இறுதிக்குள் 20000 அங்கத்தினர்கள் ஆகும்படி செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். தஞ்சை, திருச்சி, சேலம் ஜில்லா தோழர்கள் சிறிது கவலை எடுத்துக் கொண்டால் ஜில்லாவுக்கு 5000 அங்கத்தினர்கள் சேர்க்கப்படுவது மிக்க எளிதான காரியம் என்றே சொல்லலாம். பெரியார் வடநாட்டு சுற்றுப் பிரயாணம் செல்லுவதால் அவர் திரும்பி வருவதற்குள் நாம் 20000 மாத்திரமல்லாமல், ஏதாவது ஒரு ஜில்லாக்காரராவது 5000 அங்கத்தினர்கள் சேர்த்து கணக்குக் காட்டி ஜனவரி மாதத்திலேயே வெள்ளிக் கும்பா பரிசு வாங்க முந்தவேண்டும். அநேகமாக பரிசு ஜனவரியிலேயே அளிக்கப்பட்டு விடலாம் என்று நம்புகிறோம். இன்று இருக்கும் நிலைமையைப் பார்த்தால் தஞ்சை ஜில்லாதான் வெற்றி பரிசு அடையும் என்று கருதுகிறோம். ஆனால் அப்பரிசு சேலத்திற்குக் கிடைக்கவேண்டும் என்பது நமது ஆசையாகும், நமது ஆசை எப்படியாகுமோ?

ஈரோட்டில் விறகுப் பஞ்சம்

யுத்தத்தினால் இன்று உலகில் பல நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்தில் நேராக ஈடுபட்டுள்ள நாடுகளானாலும் சரி, மறைமுகமாக ஈடுபட்டுள்ள நாடுகளானாலும் சரி, நடுநிலைமை வகிக்கிற நாடுகளானாலும் சரி எல்லா நாடுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டு மக்களின் வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனினும், அந்த நாடுகளில் மக்கள் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்களேயல்லாது, இந்த நாட்டு மக்களைப்போல் பாதிக்கப்படவேயில்லை.

யுத்தம் ஆரம்பமாகி இந்த 6-வருட காலத்திற்குள், மக்களுக்கு அவசியமான பொருள்களின் விலை வாசிகள் விறு விறு என்று ஏறிக்கொண்டே வந்திருக்கிறது. இதைத் தடுக்க அதாவது இவ்வாறு விஷம்போல் விலை ஏறுவதைத் தடுக்க சர்க்காரார் ஏதாவது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால், அப்பொருள்களை அடியுடன் மறைத்து வைத்து கள்ள மார்க்கட்டில் விற்க ஆரம்பித்து விடுகிறார்கள். காலம் பிற்பட்டாவது, சர்க்காரார் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றாலும் அந்த நடவடிக்கைகளையும் பயனற்றதாக்கி விடுகிறார்கள் மக்கள் நலனைக் குறித்து கவலையோ, மக்களிடத்தில் அன்போ இல்லாத சுயநலக் கூட்டத்தார். எரிகிற வீட்டில் பிடுங்கினது மிச்சம்-லாபம் என்ற ஒரே கருத்தின்மீது கொள்ளை லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு அக்கூட்டத்தார் வாழ்கிறார்கள் என்பது ஆங்காங்கு, கொள்ளை லாபம் தடுக்கும் சட்டத்தின் கீழ் நாடோறும் தண்டிக்கப்படுபவர்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நாட்டிலே ஒரு கூட்டத்தார் தான் இவ்வாறு இருக்கிறார்களே என்றால், சர்க்காராவது புத்திசாலித்தனமாக நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஏன் இவ்வாறு கூறுகிறோமென்றால், பொருள்களின் விலைகளை சர்க்காரார் நிர்ணயம் செய்துவிடுகிறார்கள். ஆனால் அந்த விலைக்கு அப்பொருள்கள் யாவருக்கும் கிடைக்கிறதா எங்கும் கிடைக்கிறதா என்பதுதான் அரிதாகயிருக்கிறது. இவ்வாறு எங்கும் அந்தவிலைக்கு யாவருக்கும் கிடைக்கத்தக்கதாக என்ன செய்கிறார்கள்? என்ன செய்ய முடிந்தது? இதனால், அதிக விலை கொடுத்தாலும் கிடைத்துக்கொண்டிருந்த பொருள்கள் கிடைக்காமல் போய்விடுகிறது. இதுதான் அவ்வுத்தரவுகளால் இன்று கண்ட பலன். கொள்ளை லாபம் கிடைக்க வழியில்லையென்று தெரிந்ததும், அவ்வியாபாரத்தையே நிறுத்திக் கொள்கிறார்கள் கொள்ளை லாபம் அடித்து வந்தவர்கள்.

ஆக சர்க்காரார் விலை நிர்ணயம் செய்யுமுன், அப்பொருள்களை முதலில் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும், அல்லது அந்த விலைக்கு யாவருக்கும்

கிடைக்குமாறு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஏன் இவ்வாறு கூறுகிறோமென்றால், ஈரோட்டில் கடந்த சில மாதங்களாக விறகு விலை விறுவிறு என்று ஏறிக்கொண்டே வந்தது. நூற்றுக்கு இருநூறு மூன்னூறு சதவிகிதம் உயர்ந்து விட்டது. இதைக் கண்ட ஸ்தல அதிகாரிகள் ஒரு விலை நிர்ணயம் செய்து அந்த விலைக்கே விற்கும்படி செய்தார்கள். ஆனால், இந்த விலைக்கு நகரத்தில் யாவருக்கும் விறகு கிடைக்குமாறு விறகு இருப்பும் வைக்கவில்லை, அதற்கான நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொள்ளை லாபம் அடைந்து வந்தவர்கள் குறைந்த விலைக்கு விற்கத் துணிவார்களா? இதனால், கடந்த ஒரு வாரமாக நகரத்தில் விறகு வருவதே நின்று விட்டது. விறகு டிப்போக்களிலும், விறகே இல்லை. ஆதலால், நகரத்தில் சாதாரண மக்கள் விறகுக்காக படும்பாடு மிகமிகப் பரிதாபகரமானதாக இருக்கிறது. ஆண்களும், பெண்களும் மைல் கணக்காக பக்கத்துக்கிராமங்களுக்குச் சென்று ஒன்றுக்கு இரண்டாகக் கொடுத்து நனைந்து சுமந்த கதை போல் சுமந்து கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய நிலைமை சென்னை, பம்பாய் போன்ற தலைநகரங்களில் ஒருநாளைக் காவது இருந்திருந்தால், பத்திரிகைகளும், பிரமுகர்களும் சர்க்கார் அதிகாரிகளும் சும்மா இருந்திருப்பார்களா? அவர்கள் எல்லாம் சேர்ந்து போடும் கூக்குரலால் அடுத்தநாளே ஏதாவது விமோசனம் பிறக்காமல் இருந்திருக்குமா? காரணம் அங்கு மேலதிகாரிகள் இருப்பதால் நடவடிக்கைகள்வெகு துரிதமாகநடக்கின்றன என்பதைத் தவிர வேறு என்ன சொல்லமுடியும்? தலைநகரத்தில் இருக்கும் மக்களது கஷ்டம் ஒருவிதமானது ஏனைய நகரங்களிலோ, கிராமங்களிலோ இருக்கும் மக்களது கஷ்டம் மற்றொருவிதமானது முன்னவர்களால் கஷ்டத்தைத் தாங்கமுடியாது, பின்னவர்களால் கஷ்டத்தைத் தாங்கமுடியும் என்று பார்க்காமல், சர்க்காரார் ஒரேவித நடவடிக்கையைத் துரிதமாக எடுத்துக்கொண்டு கூடுமானவரை மக்கள் படும் கஷ்டத்தைப்போக்க முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். விலையை குறைப்பதற்கான தகுந்த நடவடிக்கை விரைவில் எடுத்துக்கொள்ள வேண்டும். இனி என்னசெய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

23-12-44ந் தேதி வரை 18580-அங்கத்தினர்கள் ரூ. 2137—12—0 சந்தா

டிசம்பர் மாதம் 23ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்கான வருடாந்திர சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. தஞ்சை	3555	9. வட ஆற்காடு	871
2. திருச்சி	2928	10. மதுரை	851
3. சேலம்	2442	11. செங்கல்பட்டு	488
4. கோவை, உதகை.	1772	12. திருவிதாங்கூர், (நாஞ்சல்நாடு)	111
5. சென்னை	1492	13. பெங்களூர்	75
6. தென் ஆற்காடு	1349	14. புதுக்கோட்டை	59
7. இராமநாதபுரம்	1333	15. இலங்கை	13
8. திருநெல்வேலி	1141		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 18580. சந்தா ரூ. 2137-12-0.

3 மாதத்துக்கு 18000 தானா?

டிசம்பர் மாதத்திற்குள் தமிழ் நாட்டில் 20000 அங்கத்தினர்கள் சேர்த்தாக வேண்டாமா?

செங்கல்பட்டும், வட ஆற்காடும் தூங்குகின்றதின் தன்மை பரிதபிக்கத்தக்கதாகும்.

மாநாடு நடந்த சேலம் மூன்றாவதாக இருப்பது பரிகசிக்கத்தக்கதாகும்.

பொன்மலை திராவிட வாலிபர் முயற்சி

திராவிட இன எழுச்சியில் ஆர்வம் மிகுந்த மக்கள் அதிலும் இளம் வாலிபர்கள் உணர்ச்சித் தீ கொழுந்துவிட்டு எரியும் உள்ளத்தினர்கள் யார் என்பதை சேலம் மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் உண்மையிலே உணர்ந்திருப்பார்கள் என்றே நம்புகின்றோம். அன்று அம்மாநாட்டில் சதிகாரக் கூட்டத்தைப் பணிய வைத்தவர்கள் இவ்விளம் வாலிபர்கள் என்று சொன்னால் மிகையாகாது இத்தகைய வாலிபர்களை அதிலும் தொழிலாள வாலிபர்களைக் கொண்ட பகுதிதான் திருச்சி-பொன்மலையாகும். இப்பொன்மலை வாலிபத் தோழர்கள்—திராவிடர் கழகத்தார், திராவிட கழகத்திற்கு நிலம் வாங்கப்போகிறார்கள். தொழிலாள வாலிபர்கள் நிலம் வாங்குவதென்றால் இது எவ்வளவு பெருமுயற்சி, அவர்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். அறிவையழித்து அடிமையாக்கும் மூடக்காரியங்களுக்கு வருடா வருடம் லட்சக்கணக்கில் பணம்செலவு செய்யும் மக்கள் பகுத்தறிவை வளர்த்து சுயமரியாதை ஒளியை வீசும் ஒரு நிலையத்தை அமைக்க உதவ முன்வரமாட்டார்களா என்ற துணிச்சல் மீதே இவர்கள் இப்பணியில் இறங்கியிருக்கிறார்கள் என்றே கருதுகிறோம்.

உண்மையிலே இந்நாட்டில் பாரெங்கும் பகுத்தறிவு மன்றங்கள் தோன்றவேண்டுமென்றால்,

மக்கள் பகுத்தறிவு பெற்று தன்மான முன்னவர்களாக விளங்க வேண்டுமென்று கருதுவார்களேயானால் இத்தகைய காரியங்களுக்கு தாராளமாக பணம் கொடுத்து உதவுவார்கள் என்பதோடு தங்கள் தங்கள் ஊர்களிலும் இத்தகைய நிலையங்களை அமைப்பார்கள் என்றும் நம்புகின்றோம்.

பொன்மலை தொழிலாள வாலிபர்களைப் பாராட்டி, நம் பெரியார் அவர்கள் 150 ரூபாய் நன்கொடை தந்து உதவியுள்ளார்கள். இதுபோலவே ஆங்காங்குள்ள தோழர்கள் தாராளமாக தோழர் டி. கிருஷ்ணசாமி பிள்ளை, திருச்சி என்ற முகவரிக்காவது அல்லது தோழர் டி. பி. வேதாச்சலம், வக்கீல், தென்னூர், திருச்சி என்ற முகவரிக்காவது அனுப்பித்தர வேண்டுகிறோம்.

பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 22-12-44-ல சென்னை கோகலே ஹாலில் நடைபெறும் காலஞ்சென்ற தோழர் சி. டி. நாயகம் அவர்களின் அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்காக 21-12-44-ந் தேதி இரவு ஈரோட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். 23-12-44-ல் சென்னை சௌந்தர்யமகாலில் நடைபெறும் "சிவகுமரனார்" என்னும் சமூக சீர்திருத்த தமிழ் நாடகத்திற்கு தலைமை வகித்துவிட்டு 24-12-44ந் தேதி தோழர் சி. என். அண்ணாதுரை முதலியவர்களுடன் வடநாட்டுச் சுற்றுப் பிரயாணமாவார்.

திருச்சி திராவிடர் கழகம்

அங்கத்தினர் பொதுக் கூட்டம்

27-12-44 புதன்கிழமை மாலை 6 மணிக்கு திருச்சி டவுன் ஹாலில் கழக அங்கத்தினர்கள் பொதுக் கூட்டம்.

தோழர் சி. தெ. நாயகம் மரண அனுதாபம்.

டை கூட்டம் முடிந்தவுடன் அடியிற் கண்ட விஷயங்கள் குறித்து தீர்மானித்தல்:

திருச்சிக்கு டாக்டர் அம்பேத்கார், தோழர் எம். என். ராய் வருகையும் நாம் செய்யவேண்டியவையும்.

நூலக அறக்கட்டளை

தாரமிழந்தவர்கள்

இளம் பெண்களை மணக்கக்கூடாது

மனைவியிழந்த "ஹிந்து"க்கள் என்பவர்களுக்குள், 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 25 வயதுக்குக் குறைவான பெண்ணை மணக்கக் கூடாது என்று பரத்பூர் சமஸ்தான சர்க்கார் சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மற்றும் ஒரு 'ஹிந்து'வின் விவாகத்துக்காக வரதட்சணை—சீதனம் வாங்குவதையும் தடுத்து ஒரு சட்டம் செய்திருக்கின்றனர். இவைகளை மீறுகிறவர்களுக்கு 3 வருஷம் வரை தண்டனை, அல்லது ரூ. 1000 வரை அபராதம், அல்லது இருதண்டனைகளையும் கொடுக்கப்படலாம் என்று இன்னொரு சட்டம் கூறுகிறது.

அறிவிப்பு

திராவிட நாட்டில் ஆங்காங்குள்ள திராவிட கழகங்களின் நிர்வாகஸ்தர்களின் பெயர்களையும், மெம்பர்களின் பெயர்களையும் தயவு செய்து 'திராவிடர் கழகம், தலைமை நிலையம், ஈரோடு' என்ற முகவரிக்கு எழுதியனுப்பக் கோரப்படுகிறது.

* *

புதியதாக கழகங்கள் நிறுவ எண்ணியுள்ள தோழர்கள், எவ்வாறு நிறுவுவது என்று நமக்கு எழுதி விவரம் கோருகின்றனர். திராவிடர் கழகத்திற்கு உறுப்பினர்களாகச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றை கூட்டி, அதில் தலைவர் உபதலைவர்கள் ஒன்று அல்லது இரண்டு பேர்கள், காரியதரிசி, உதவி காரியதரிசி, பொருளாளர், 11-பேருக்குக் குறையாத நிர்வாகக் கழக உறுப்பினர்கள் முதலியவர்களைத் தெரிந்தெடுக்கவேண்டியது. இவ்வளவு தான் கழக அமைப்பு வேலை.

திராவிட கழகம்,
தலைமை நிலையம்.

அலனூர் பேட்டை திராவிடர் கழக செயலாளர் தோழர் செ. பா. மல்லிகார்ச்சுனரால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

1945-ம் ஆண்டு திராவிட கழக மாநாடு ஏற்பாடுகள்.

கழக வேலையும், அங்கத்தினர்கள் சேர்க்கையும்.

எல்லா திராவிட கழக அங்கத்தினர்களும் வரும்படியாக கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

தி. பொ. வேதாசலம், அமைச்சர்.

தூத்துக்குடி மத்திய திராவிடர் கழகம் அழைப்பு

நாளது 25-12-44-ந் தேதி திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு எம். எஸ். சிவசாமி இல்லத்தில் (வாத்தியார் தெரு) நிர்வாகக் கமிட்டி கூடி, திராவிடன் அச்சகம், திராவிட மாணவர் சுற்றுப் பிரச்சாரம் முதலிய காரியங்கள் கவனிக்கப்படுமாகையால் இயக்கத் தோழர்கள் அனைவரும் தவறாது வரும்படி கோருகிறேன்.

நெல்லை மாவட்ட திராவிடர் கழகம் வேண்டுகோள்:-

கிருஸ்துமஸ் விடுமுறை நாட்களில் நமது மாவட்டத்தில் தோழர் ஜனார்த்தனமும் பிறமாணவர்களும் சுற்றுப் பிரச்சாரம் செய்யவிருப்பதால் நெல்லை மாவட்டத்தின் முக்கிய நகர கிராமங்களில் பொதுக்கூட்டம் நடத்த விருப்பமுள்ள தோழர்கள் தங்கள் தங்கள் ஊர்களில் தகுந்த ஏற்பாடுகள் செய்து அடியிற்கண்ட முகவரிக்கு தாக்கல் எழுத கோருகிறேன்.

எம். எஸ். சிவசாமி,
செயலாளர்
நெல்லை மாவட்ட திராவிடர் கழகம், தூத்துக்குடி.

விருதுநகர் நகரசபை

விருதுநகர் நகரசபைக்கூட்டத்தில் சர் ஏ. டி. பன்னீர் செல்வம், சர் பி. தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர், பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியவர்களின் படங்களை கௌன்சில் ஹாலில் தொங்கவிடுவதென முடிவு செய்யப்பட்டது. டை படங்களை சேர்மன் ராவ்பகதூர் வி. வி. ராமசாமி அவர்களும் வைஸ்சேர்மன் எம். எஸ். பி. நாடார் அவர்களும் அணிப்பார்கள்.

சென்னை திராவிடர் கழகம்

தியாகராயநகர் வட்டம் திராவிடர் கழகக் கூட்டம் மேற்படி இடத்தில் ஞாயிறு 24-12-44 மாலை 4 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் தொழில் கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும். பெரியார் ஈ. வே. ரா. அவர்களும் வருவார்கள்.

மாவட்டந்தோறும் மாணவத் தோழர்கள்!

திராவிட மாணவர் பிரசாரக் குழுவினர் திராவிட நாட்டின் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கி விட்டனர். மாணவர் சிறுபடையினை முன்னமே தங்களுக்கு அழைக்கத் தவறின தோழர்கள் உடனே எமக்கு எழுதுவதோடு அந்தந்த மாவட்டத்திலும் உள்ள முக்கிய இயக்கத் தோழர்களுக்கு எழுதித் திட்டம் வகுத்துக் கொள்வாராக. மாணவர் பிரசாரத் திட்டம் வருமாறு:

திருநெல்வேலி

தோழர்கள் பி. ஜனார்த்தனம் பி. ஏ., எஸ். தவமணி இராசன் ஆகிய இருவரும் கீழ்க்கண்ட முறையில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

டிசம்பர்.
21, 22, 23 திருநெல்வேலி
24, 25 தூத்துக்குடி
26 எட்டயாபுரம்
27 கீழ இரால்
28 கோட்டாறு.
29 கல்லிடைக்குறிச்சி

திருச்சி

தோழர்கள் அ. மா. பெரியசாமி, கிரவி-கோ. இரத்தினவேல்; வை. நன்மாறன் ஆகிய மூவரும் மற்றும் சிலருடன் 24-12-44 முதல், சுற்றுப் பயணம் தொடங்கி திருச்சி, பொன்மலை, சீரங்கம், மணச்சநல்லூர், குளித்தலை, கரூர், பெரம்பலூர், சிறுகனூர், ஜெயங்கொண்டம் முதலிய ஊர்களுக்குச் செல்லுவார்கள். தேதி முதலிய விபரம் வேண்டுவோர் உடனே திருச்சி, தென்னூர் தோழர் டி. பி. வேதாசலம். அவர்கட்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

சேலம்

24-12-44 முதல் தோழர்கள் கி. தியாகராசன், இளவழகன், வீரமணி (10 வயது சிறுவன்) எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் சேலம் மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். பொத்தனூர், வேலூர், புதுப்பாளையம், நாமக்கல், செவ்வாய்ப்பேட்டை, அம்மாப்பேட்டை முதலிய ஊர்களுக்கு முதலில் செல்வார்கள். அழைக்க விரும்புகின்றவர்கள் உடனே தாமதமின்றி எமக்கு எழுதுக.

கோயமுத்தூர்

இம்மாவட்டத்தில் 24-12-44 அன்று சுற்றுப் பயணம் தொடங்கும். தோழர்கள் அப்துல் கபார், பீ. முனிசாமி, இரா. சந்தானம் ஆகியோர் பிரசாரம் செய்வார்கள். சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் முதலிய ஊர்களிலிருந்து அழைப்புகள் வந்துள்ளன. மாணவர் பட்டியினைப் பிற ஊர்களுக்கு அழைக்க விரும்பும் தோழர்கள் உடனே கீழ்க்கண்ட முகவரிக்கும் எழுதவும்.

ஆர். சந்தானம், செயலாளர்,
திராவிடர் கழகம்,
என். ஆர். மண்டி, ஈரோடு.

மதுரை

தோழர்கள் குடந்தை சன். தவமணி இராசன், கே. சி. கோவிந்தராசு ஆகியவர்கள் இம்மாத இறுதியில் மதுரை மாவட்டத்தில் தேனி, போடி, பெரியகுளம், திண்டுக்கல், மதுரை ஆகிய ஊர்களுக்கு சுற்றுப் பயணம் செல்வார்கள். விபரம் வேண்டுவோர் உடனே எமக்கு எழுதித் தெரிந்து கொள்க.

இராமநாதபுரம்

இந்த மாவட்டத்தில் தோழர்கள் புலவர் நா. மு. மாணிக்கம், இரா. வில்லாளன், மு. திராவிடமணி முதலியோர் சுற்றுப் பிரயாணம் சென்று பிரசாரம் செய்வார்கள். சிங்கம்புணரி, கோனாப்பட்டு, சிவகெங்கை, அருப்புக்கோட்டை; விருதுநகர், திருப்பத்தூர் (26-12-44), காரைக்குடி (24-12-44), தேவகோட்டை (25-12-44) ஆகிய ஊர்களுக்குச் செல்வார்கள். பிற ஊர்களிலிருந்து அழைக்கவிழைகின்றவர்களும், தேதி குறிக்க விரும்புகின்றவர்களும், உடனே எமக்கும், தோழர் காரைக்குடி இராம சுப்பையா அவர்கட்கும் எழுதவும்.

தென்னாற்காடு

தென்னாற்காடு மாவட்டத்தில் அதிகமான இடங்களிலிருந்து அழைப்புகள் வந்திருக்கிறபடியால் அம்மாவட்டத்தை இருபகுதிகளாகப் பிரித்து இரண்டு மாணவர் குழுவினைப் பிரசாரத்திற்காக அனுப்புகிறோம். சிதம்பரம், விருத்தாசலம், கல்லக்குறிச்சி, திருக்கோவிலூர் வட்டங்கள் ஒரு பகுதியாகவும்; கடலூர், விழுப்புரம், திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்கள் மறு பகுதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. விருத்தாசலம் பகுதிக்கு தோழர்கள் டி. சி. எஸ். மணியன், ப. வெற்பாசன், வி. நடராசன், நாராயணன் ஆகியோர் கீழ்க்கண்ட திட்டப்படி சுற்றிச் செல்வார்கள்.

24-12-44 காலை மேல் புவனகிரி
" மாலை கீழ்ப் புவனகிரி.
25-12-44 காலை வடஅரிராசபுரம்
" மாலை பூந்தோட்டம்.
(மேற்பார்வை: கே. கமலநாயம்)
26-12-44 காலை கண்டியங்குப்பம்
" மாலை திட்டக்குடி.
27-12-44 காலை சங்கராபுரம்
" மாலை விருத்தாசலம்.
28-12-44 காலை விருத்தாசலம் ரயில்வே காலனி
(மேற்பார்வை: சி. முனுசாமி)
28-12-44 மாலை உலகாபநல்லூர்.
29-12-44 காலை பெத்தானூர்
" மாலை சின்ன சேலம்
30-12-44 காலை செட்டியக்குல்
" மாலை கச்சிராயாபாளையம்.
31-12-44 காலை தலைவாசல்
" மாலை ஆத்தூர்.
(மேற்பார்வையாளர்: பூ. கணேசன் பி. ஏ. (ஆனர்ஸ்)
& கலாமணி ஜி. ஆர். பாபு)

ஜனவரி,
1-1-45 கல்லக்குறிச்சி
2-1-45 தியாகதுருகம்.
(மேற்பார்வை: எ. கல்யாணியன்)

மேலும் விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

சி. முனுசாமி, M. R. தாஸ் & Co.
சைக்கிள் வியாபாரம்; விருத்தாசலம்.

இரண்டாவது பகுதியில் தோழர்கள் நன்னன், இரணியல், சாமிநாதன், தமிழ் ஒளி ஆகியோர் கடலூர் பட்டாம்பாக்கம், குறிஞ்சிப்பாடி, புதுப்பேட்டை, பண்ருட்டி, விழுப்புரம், அவலூர், பேட்டை, சம்பனாம்பாடி, அன்னியூர் திண்டிவனம், காவேரிப்பாக்கம், தாதாபுரம், கண்ணியம், செஞ்சி, மேல்வச்சேரி முதலிய இடங்களுக்குப் போவார்கள். செய்தி தெரியவேண்டுமானால் கீழ்க்காணும் முகவரிக்கு உடனே எழுதுங்கள்.

ஆ. திராவிடமணி பி. ஏ.,
திராவிடர் கழகம்,
இருசப்பசெட்டித்தெரு,
கடலூர் O. T.

பிரசாரக் குழுவினைத் தத்தம் ஊருக்குத் தவறாது அழைத்துச் சென்று கூட்டங்கள் நடத்தி இச்சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாய் நடத்திக்கொடுக்கும் பொறுப்பை அந்தந்த இடங்களிலுள்ள இயக்கத் தோழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

சென்ற இதழில், திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர்களாகச் சேரும் இடங்களில் திருச்சி வெற்றிலைபாக்குக் கடை டி. எஸ். வீரலிங்கம் என்றிருப்பதை டி. எம். விசுவலிங்கம் என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

ஆசிரியர்.

மாணவர் மாநாடு

பிப்ரவரி முதல் வாரத்தில் தென்னாற்காடு மாவட்டத் திராவிட மாணவர் மாநாடு பண்ருட்டிக் கடுத்த புதுப்பேட்டையில் விமரிசையாக நடைபெறும்.

தலைவர்: ஈ. வெ. கி. சம்பத்; திறப்பாளர்: இரா. இளம்வழுதி, பெரியார், அண்ணாதுரை முதலிய அறிஞர்கள் வந்து பேசுவார்கள். மாவட்டத் திராவிட மாணவர்களே திரண்டு வாருங்கள்.

வரவேற்புக் கழகத்தார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வவு, செலவு எவ்வளவு, எந்த வகையிலே செலவழித்தாய் என்று யாராவது கடவுளை கேட்கிறார்களா? தமிழ்நாட்டில் சுமார் 3000 கோயில்களின் வருஷ வருமானம் 2½ கோடி ரூபாய். அதாவது, ஆண்டு ஒன்றுக்கு 250 முதல் 20 லட்சம் ரூபாய் வரையில் வரும்படி வருகின்ற கோயில்கள் நம் நாட்டில் சுமார் 8000 என்றால், அவ்வளவு பொருளும் அநாவசியமான முறையில் செலவாகிறது என்றால், இதைப் போன்ற அக்கிரமம் இந்த உலகத்தில் வேறெங்காவது காணமுடியுமா? இதைச் சொன்னால் பொல்லாதவனா? கடவுள் என்றால் நமக்கும் புரியாத, ஆனால் மிக நம்பிக்கையான இடமாக இருக்கின்றது. கடவுள் இல்லை என்று இதுவரையில் நாங்கள் சொன்னதில்லை. எது கடவுள் என்கின்றோம். கடவுள் பெயரால் நடக்கின்ற தீமைகள், அநியாயமான காரியங்கள். இவைகளை சரியா என்றும், இந்த அக்கிரமங்களை கடவுள் அனுமதிக்கலாமா என்றும் கேட்கிறோம். இதுதான் நாஸ்திகமா? ஆஸ்திகம் என்றால் முதலில் உங்களுக்கே புரியுமா என்று கேட்கிறேன்!

உழைப்பாளி மக்கள் உணவு உடையில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலையில் புரோகிதர் பூணூலையே முதலாகக் கொண்டு எவ்வளவு சுலபமாக மேன்மையான வாழ்வு வாழ்கின்றனர். பிறர் தயவினால் ஒரு சிறிய ஓட்டலைத் தொடங்குகிறான் ஒரு பார்ப்பனன். நாளடைவில் 'சாமி'யாகவும், ஒரு முதலாளியாகவும் ஆகிவிடுகிறார். காப்பிக் கடையில் கணேசர் முதல் காந்தி, சாயிபாபா வரையில் படங்களில் தொங்குகின்றனர். 'பிராமணாளுக்கு மாத்திரம்' என்று பலகையும் தொங்குகிறது. பின்னர், அங்கே இரண்டு மூன்று பார்ப்பனப் பத்திரிகைகள். ஆகவே அது ஒரு சிறந்த ஆஸ்திக, காங்கரஸ் பிரசார நிலையமாகவும், ஜாதி பிரித்துக் காட்டும் ஸ்தாபனமாகவும் ஆகி விடுகிறது. இப்படித்தானே இருக்கிறது இவர்கள் (ஆஸ்திகர்கள்) முன்னேற்றம்! இவர்களுக்குத் துணையாக உள்ளவை தானே இந்த நாட்டில் உள்ள தேசியப்-பார்ப்பனப்-பத்திரிகைகளும். எப்படியாவது நம் மீது கெட்ட அபிப்பிராயத்தை உண்டாக்கி ஒழிக்கப்பார்ப்பது தானே இவர்கள் வேலையாகிவிட்டது.

ஆதலால், இம்மாதிரியான எதிர்ப் பிரசாரங்களாலும், போலிச் செய்திகளாலும் மக்கள் ஏமார்ந்து போகாமல் நாட்டினுடைய உண்மை நிலை, நாட்டு முன்னேற்றத்துக்குச் சரியான வழி ஆகியவற்றை உணர்ந்து அதற்கு ஏற்ற வழியிலே முயற்சியுடன் நடந்து வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், நான் அடிக்கடி கூறி வருவது போல நமது சமுதாயத்துக்கு நீங்காத மலேரியாக் காய்ச்சல் கண்டிருக்கிறது. இதற்குக் காரணம் கொசுவென்று அறிந்தவுடன், கொசுவலை போட்டுக் கொண்டால் மட்டும் போதாது. கொசு உண்டாவதற்கு மூலகாரணமான சாக்கடைகள், அழுக்குக்குட்டைகள், குப்பை கூளங்கள் ஆகியவற்றை அடியோடு ஒழித்துச் சுத்தமாக்கினால்தான் கொசுக்கள் ஒழியும், மலேரியா காய்ச்சலும் நீங்கும். அந்த அசுத்த அழுக்குக்குட்டைதான் புராணம், கீதை, புரோகிதம், கோவில்களாய் இருக்கின்றன. அங்கிருந்துதான் இந்த கொசு பிறக்கிறது. அவைகளை அகற்றுங்கள்.

மாணவரே வாரீர்!

திருச்சி திராவிட மாணவர்களே! குடந்தை, விருதுநகர், மதுரை, தஞ்சை போன்ற ஊர்களிலெல்லாம் மாணவர் மாநாடு நடந்ததைக் கண்ட திருச்சி திராவிட மாணவர்களே நீங்கள் இன்னுமா திராவிடக் கோட்டையாகிய திருச்சியிலே செயலாற்றாமல் இருப்பது? அதுவும் பெரியாரின் பேரன்பைப் பெற்ற திருச்சி திராவிட மாணவர்களே எழுங்கள்! செயலாற்ற எங்கே, ஊர்களையும்விட நமது திருச்சியிலே வெகு சிறப்பாக, வரும் பிப்ரவரி இரண்டாம் வாரத்திலே தவறாது நடத்தப் போகிற திராவிட மாணவர் மாநாட்டை வெற்றிகரமாக நடத்த மாணவரே வாருங்கள். மன்றத்துடன் திருச்சி மாவட்டத்திலுள்ள தன்மான முன்னணி திராவிட மாணவர்களே தங்களுடைய ஒத்துழைப்பைத் தாருங்கள். தளராது உழைத்திடின் வெற்றி நமதே! மாணவத் தோழரே தயங்காது இன்றே எம்முடன் செயலாற்ற முனையுங்கள்.

டி. சி. எஸ். மணி, மாநாட்டு வரவேற்புக் குழு காரியதரிசி, திருச்சி.

பார்ப்பனரல்லாதார் வக்கீல் சங்கம்

18-12-44-ந் தேதி நடந்த சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் வக்கீல் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில், தமிழ் ராஜ்யக் கட்சி காரியாலயமாகிய சென்னை பிராட்வே முதல் தளம் 5/9 என்னும் கட்டிடத்தில் ஷை சங்கத்தின் முதல் மாநாட்டை 31-12-44-ந் தேதி சர் பி. டி. ராஜன் தலைமையில் கூட்டுவதென்றும், தோழர் வி. எல். எத்திராஜ், திவான் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை ஆகியவர்களுக்கு அன்று மாலை 5 மணிக்கு அதே இடத்தில் தேநீர் விருந்தளிப்பதென்றும், மாநாட்டுக்கும் தேநீர் விருந்துக்கும் பார்ப்பனரல்லாத வக்கீல்களை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கும்பகோணம் திராவிட மாணவர் கழகம்

15-12-44 அன்று மாலை பெரியார் வாசகசாலையில் நடந்த சாதாரணக் கூட்டத்தில் தோழர் எம். அமீர் அலி தலைமையில் தோழர் டி. ஜே. தர்மன் "கந்தரம் பிள்ளையும் சுபமணியரையும்" என்பது பற்றி விளக்கமாக விரிவுரையாற்றினார். செயலாளர் தோழர் சந்தானசாமி நன்றி கூறினார்.

ஆதிதிராவிட மாநாடு

பொன்னேரி தாலுகா ஆதிதிராவிட மாநாடு வரும் ஜனவரி மாதக் கடைசியில் நடத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அம்மாநாட்டுக்குப் பொருளுதவி செய்கிறவர்கள் "சி. எல். முத்து, பொதுக் காரியதரிசி, பொன்னேரி தாலுகா ஆதிதிராவிட இளைஞர் கழகப் பொதுக் காரியதரிசி, பொன்னேரி போஸ்ட்" என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு ஷை கழகத்தார் தெரிவிக்கின்றனர்.

மறைவு

பெங்களூரில் ஜவுளி வியாபாரம் செய்யும் தோழர் எஸ். பழனிசாமியின் தாயார் தோழர் கோவிந்தம்மையார் 9-12-44-ந் தேதி இயற்கை எய்தினார் என்பதை யறிய வருந்துவதாகவும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஷையூர் திராவிட கழகத்தின் சார்பாக தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் ஷை கழக உதவி காரியதரிசி தெரிவித்துக்கொள்கிறார். அன்னாரின் பிரேதம் யாதொரு மூடச்சடங்குகளுமின்றி அடக்கம் செய்யப்பட்டது. இதை ஒட்டி 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

மதுரை தாலுகா உலகநேரி கிராமம் பெருங்கிழவரும் காங்கரஸிலிருந்து திராவிடர் கழகத்தில் சின்னாட்களுக்கு முன் மனம் திரும்பியவருமான தோழர் வெ. சங்கரலிங்கக் கோனார் மதுரையில் 19-11-44-ஆம் தேதி இயற்கை எய்தினார் என்பதை அறிந்து தோழர் கே. ஜி. ரங்கசாமி அவர்கள் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறார்.

* *

திருச்சி ஜில்லா, பிரபல மிராசுதாரும், ஆப்காரி கண்டிராக்டருமான எ. அங்கமுத்து அம்பலகாரர் அவர்கள் சிறிய தகப்பனாரும் டிஸ்ட்ரிக்ட்போர்ட் மெம்பரான எம். நாகமுத்து அம்பலகாரர் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் 16-12-44-ந் தேதியன்று மல்லியமுத்து கிராமத்தில் மரணமடைந்தார்.

மேஹகோவில் வேலைபார்க்கும் ஓ. எம். சி. ரெ. 51437 எஸ். முத்துகிருஷ்ணனால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

திராவிட நாட்டுச் செய்திகள்

சிப்ளாப்புத்தூரில் 3-12-44-ஆம் தேதி தோழர் பெ. பழனியாண்டிமுத்து ராஜா அவர்களின் தலைமையில் "தமிழர் சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது. ஷை சங்கத்திற்கு நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

இராசிபுரம் தாலுகா பட்டணம் கிராமத்தில் 3-12-44-ஆம் தேதி நடைபெற்ற பட்டணம் வாலிப முன்னேற்ற சங்க கூட்டத்தில், சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் முழுவதையும் பூரணமனதோடு ஆதரித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. ஷை கூட்டம் தோழர் என். செங்கோடு தலைமையில் நடைபெற்றது.

* *

2-12-44-ஆம் தேதி தோழர் க. பிச்சமுத்து தலைமையில் நடந்த திருச்சி மருத்துவர் சங்க அனுதாபக் கூட்டத்தில் குடந்தை சித்தவைத்தியர் சா. பொன்னுசாமி 9-11-44-ம் தேதி மரணமடைந்ததற்கு வருந்துவதாக ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

2-12-44-ல் ஓமலூர் தாலுகா அலவாய் பட்டி ஆதிதிராவிட வாலிப சங்க தோழர் ஈ. பி. ராமசாமியால் திறந்து வைக்கப்பட்டது. தோழர் எ. பி. சத்தியநாதன் பேசிய பின் ஷை சங்கத்திற்கு தோழர் எ. பி. சத்தியநாதனைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் குழு தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

29-11-44-ம் தேதி குலமங்கலம் லேபர் பாடசாலையில் தோழர் சி. குப்புசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் குலமங்கலம் ஆதிதிராவிட வாலிபர் கழகத்திற்கு தோழர் எம். சிவசுப்பிரமணியத்தை தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டது. சங்கத்தை எவ்வாறு முன்னேறச் செய்யலாம் என்பதுபற்றி தோழர் எம். சிவசுப்பிரமணியம் சொற்பொழிவாற்றினார்.

* *

பரமக்குடியில், 27-11-44-ம் தேதி தோழர் பி. எஸ். சுந்தரமாணிக்கம் தலைமையில் நடந்த இசைவேளாள இளைஞர் சங்கக்கூட்டத்தில், நிலைக்கோட்டை தோழர் என். எஸ். மணி பேசியபின் தோழர் சே. எஸ். வேலுச்சாமியை தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

2-12-44-ம் தேதி இராமேஸ்வரத்தில் தோழர் செ. இராமனாதபிள்ளை தலைமையில் கூடிய இசைவேளாள இளைஞர் சங்கக்கூட்டத்தில் "சமூக சீர்திருத்தம்" என்பதுபற்றி தோழர் என். எஸ். மணி சொற்பொழிவாற்றியபின் தோழர் கே. கருப்பையாவை தலைவராகக் குழு ஏற்படுத்தப்பட்டது.

* *

நாமக்கல் தாலுகா சொசவம்பட்டியில் தேவேந்திரகுல வேளாள வாலிபர் சங்கமொன்று 3-12-44-ம் தேதி மோகனூர் தோழர் எம். பி. பெரியசாமி எம்.எல்.ஏ., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பல தோழர்கள் சங்கத்திட்டம், நோக்கம் முதலியனபற்றி பேசினார்கள். பின்னர் நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

வடஆற்காடு ஜில்லா தோல் பதனிடும் தொழிலாளர் சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 7-12-44-ம் தேதி வாணியம்பாடியில் தோழர் ஜெ. ஜெ. தாஸ் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் 10-10-44-ம் தேதி வேலூர் ஜில்லா கலெக்டர் ஆபீஸில் நடந்த ஒப்பந்தப்படி 6 ரூபாய் பஞ்சப்படியை தினசரியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டும் முதலாளிகள் இணங்க மறுப்பதால், 23-12-44-ம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

* *

பம்பாய், தாராவி தமிழ்நாடு பகுத்தறிவு நிலையத்தின் 11-வது மாதாந்திரக் கூட்டம் 26-11-44-ம் தேதி தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. கௌரவ செயலாளரும் நிர்வாக உறுப்பினருமான தோழர்கள் எஸ். பெரியசாமி எஸ். சுப்பையா ஆகியவர்களின் தந்தையார் தாய்நாட்டில் 17-11-44-ம் தேதி மறைந்ததற்கு வருந்தி அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முதல் ஆண்டு பூர்த்தி விழா ஜனவரி இறுதியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தெ. இ. ஆ. தி. வாலிபர் கழகத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 26-11-44-ஆம் தேதி தோழர் வி. எஸ். டி. ராஜா தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் வரவு செலவு கணக்குகளையும் பரிசீலித்து ஒப்புக் கொள்ளப்பட்டு பொதுக் காரியதரிசி தோழர் கே. எஸ். பாலகிருஷ்ணனிடம் சகலமும் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் இதர விஷயங்கள் ஆலோசனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

* *

மோகனூர் தேவேந்திர இளைஞர் சங்க வாராந்திரக் கூட்டம் தோழர் எம். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பேசிய பின், மதுரையில் நடைபெற்ற சென்னை மாகாண மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

* *

ஆம்பலூரில் 29-11-44-ஆம் தேதி நடைபெற்ற வ. ஆ. ஜில்லா, திருப்பத்தூர் தாலுகா, அம்பலூர் பிராமணரல்லாத வாலிப கழகத்தின் பெயரை அம்பலூர் திராவிடர் கழகமாகத் திருத்தியமைப்பதென முடிவு செய்யப்பட்டது. ஷை கழகத்திற்கு தோழர்கள் எம். விஜயரங்கம் தலைவராகவும், பெரியண்ணன் உபதலைவராகவும், டி. ஷண்முகம் காரியதரிசியாகவும், டி. ஸ்டாலின் நிதி காப்பாளராகவும், சி. துரைசாமி, டி. துரைசாமி, ஜி. கோபால், பட்டமுப்பர், எஸ். கைலாசம் ஆகியவர்கள் நிர்வாகக் கழக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அக்கூட்டத்தை யொட்டியே பெரியார் பிறந்த 66-வது ஆண்டு விழாவும் கொண்டாடப்பட்டது.

* *

தில்லை இளங்கோமன்றத்தின்சார்பில் 3-12-44-ம் தேதி "புரட்சிக் கவி விழா" புலவர் சா. மு. மாணிக்கம் தலைமையில் நடந்தது. தோழர் இர. தண்டபாணி, மதியழகன், அன்பழகன், புலவர் முருகேசனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வில்லாளன் நன்றி கூறினார்.

* *

ஈரோடு சலவைத் தொழிலாளர் கூட்டம் 1-12-44-ம் தேதி தோழர் சின்னப்பன் தலைமையில் நடந்தது. பல தோழர்கள் சங்கமும் நமது கடமையும் என்பது பற்றிப் பேசினார்கள்.

* *

ஈரோடு முனிசிபல் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர் ஐக்கிய சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் 2-12-44-ம் தேதி தோழர் கே. பழனியப்பன் தலைமையில் கூடியது. அதுசமயம் தோழர் கே. பழனியப்பன் அவர்களை தலைவராகவும், தோழர் கே. எஸ். ஆறுமுகம் அவர்களை காரியதரிசியாகவும் கொண்ட ஒரு நிர்வாகக் கழகம் தெரிந்தெடுக்கப்பட்டது. தோழர் என். கிருஷ்ணசாமியால் நன்றி கூறப்பட்டது.

* *

நாகூர் சுயமரியாதை இளைஞர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் 24-11-44 ம் தேதி நடைபெற்றது. அதுசமயம், சேலம் மாநாட்டின் தீர்மானங்களை ஆதரித்தும். ஷை சங்கத்தை திராவிடர் சு. ம. இளைஞர் சங்கம் என்று மாற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* *

தஞ்சை ஜில்லா பழைய நீடாமங்கலம் முஸ்லிம் வாலிபர் முன்னேற்றச் சங்கத் திறப்பு விழா தோழர் கெ. பி. ஷேக்தாவூது தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பின் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

* *

சேலம் ஓ. கொண்டலாம்பட்டியில் 18-11-44-ம் தேதி சேலம் தோழர் எஸ்.

வி. நாகப்பகவுண்டர் தலைமையில் நடந்த உள்ளூர் மருத்துவர் சங்கக் கூட்டத்தில் தோழர் டி. மாசிபண்டிதரை தலைவராகக்கொண்ட நிர்வாகக்கமிட்டி ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

29-11-44ந் தேதி தோழர் சி. கெ. சுப்பையா தலைமையில் நடந்த கோவை மருத்துவர் சங்கக் காரியக்கமிட்டிக் கூட்டத்தில், சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் நன்மைக்காகவும் எந்த ஒரு கமிட்டி அங்கத்தினரும் தொழிலுக்கு அவசியமான பொருள்களை விற்பனைக்கு வாங்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. 11-9-44 முதல் 22-11-44ந் தேதிவரை சங்கத்தின் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

o o

15-11-44ந் தேதி தோழர் ப. முருகையா தலைமையில் நடைபெற்ற ஈரோடு மருத்துவர் சங்க மாதாந்திரக் கூட்டத்தில், பல மாதங்களுக்கு முன் மாஜி தலைவரின்மீது நிறைவேற்றிய நம்பிக்கையில்லாத் தீர்மானம் திரஸ்கரிக்கப்பட்டது.

பின்னர் தோழர் கருங்கல்பாளையம் ஆறுமுகக் கவுண்டர் தலைமையில் நடந்த கூட்டத்தில் மேளம் வாசிப்பவர்களின் விஷயம்பற்றி விவாதிக்கப்பட்டது.

o o

திருநெல்வேலி ஜில்லா திருப்பணிக் கரிசல்குளம் கல்வியபிவிருத்திக் கழக சார்பில் 22-11-44ந் தேதி தோழர் லீலா பாவையர் அம்மையார் தலைமையில் நடந்த கூட்டத்தில் இலங்கை ச. ம. தோழர் டி. எம். ஏ. ஹமீது தற்காலக் கல்வி நிலையும் திராவிடரும் என்னும் பொருள் பற்றிப் பேசினார். தோழர்கள் எம். பி. மந்திரம், என். டி. சுப்பையா ஆகியவர்கள் நன்றி கூறினார்கள்.

o o

இராசிபுரம் பகுத்தறிவு சங்கத்தின் சார்பில் 24-11-44-ந் தேதி தோழர் எஸ். அர்த்தநாரி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். டி. நாராயணசாமி, என். கிருஷ்ணன், கே. எம். பெருமாள், ஆர். என். ஏ. சின்னத்தம்பி முதலியவர்கள் மூடப்பழக்கவழக்கம் என்பது பற்றிப் பேசினார்கள்.

o o

19-11-44-ந் தேதி தோழர் கே. ராமசாமி தலைமையில் நடந்த சேலம், அம்மாப்பேட்டை ஜஸ்டிஸ் பனகல் வாலிபர் சங்கத்தின் வாராந்திரக் கூட்டத்தில் திராவிடரும் புத்துணர்ச்சியும் என்னும் பொருள் பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

26-11-44ந் தேதி தோழர் கே. வி. சின்னப்பன் தலைமையில் நடந்த மற்றொரு கூட்டத்தில் "நாம் யார்? நம் நாடு எது?" என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள். [illegible] திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர் சேர்க்க தோழர்கள் ஓ. ஆர். சீதாராமுக்கும், கே. ராமசாமிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

o o

26-11-44ந் தேதி நீடாமங்கலம் சப் இன்ஸ்பெக்டர் ஜனாப் மஜீத்கான் தலைமையில் இசைவேளாளர்கள், மருத்துவ சமூகத்தவர்கள் கூடினார்கள். இரு சமூகத்தாரும் ஒருவருக்கொருவர் தொழில் செய்வதாக முடிவு செய்யப்பட்டது.

o o

26-11-44ஆந் தேதி சென்னை இராயப்பேட்டை பஜார் தெருவில் ஆதி திராவிடர் இளைஞர் கழகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. அக் கழகத்திற்கு தோழர் வி. கெ. மதன சேகரனை தலைவராகக் கொண்ட நிர்வாகக் கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டது. இக்கழகத்தின் சார்பில் ஒரு வாசகசாலையும் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

o o

சென்னை, கார்பொரேஷன் பேசின் ரோடு ஆதிதிராவிட தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் முதல்கொத்தனார் ஸ்டான்லி நகர் தென்கோட்டையார் ஹாலில் தோழர் கெ. சுந்தரம் தலைமையில் நடந்த கூட்டத்தில், தொழிலாளர்களின் முன்னேற்றம் என்பது பற்றித் தோழர்கள் [illegible], ஆர். டி. [illegible] முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

மதிப்புரைகள்:

பகுத்தறிவுப் பாசுரம்

இயற்றியவர்: டி. ஆர். வீரய்யனார், துறையூர்.

விலை: அணா 2.

இப் புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. வசனமும், உணர்ச்சியும் ஊட்டவல்ல பாடல்கள் பலவிருக்கின்றன. சினிமா மெட்டில் சில சில பாடல்களாக தொகுக்கப்பட்டிருப்பது சிறுவர் முதல் முதியோர் வரை எளிதில் கற்றுப் பயன்பெற முடியும் என்று நம்புகிறோம். சுயமரியாதை இயக்கத்தைப் பரப்ப முயலும் தோழர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை ஆதரிப்பதின் மூலம், இன்னும் இதுபோன்ற பகுத்தறிவு பாசுரங்கள் பல தோன்றுவதற்கு வசதியளிப்பவர்களாவீர்கள்.

"டி. ஆர். வெங்கிடசாமி, 'திராவிடன்', 'குடி அரசு' ஏஜண்டு, துறையூர்" என்ற விலாசத்திற்கு மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புத்தகம் அனுப்பப்படும்.

வீரக்குறள்

பெரியார் பிறந்த இனத்தை முன்னிட்டு தஞ்சை 'அழகு' தொண்டர்கள் இ. தயாளசன், ஆரை சுந்தரம் ஆகியவர்களால் இயற்றப்பட்ட "வீரக்குறள்" என்ற புத்தகம் நமது பார்வைக்கு வந்தது. செங்கொடியின் சிறப்பைப்பற்றியும், ஆரியரால் தமிழன் எவ்வளவு துன்புற்றான் என்பதையும், விதவைகளின் துயரையும் இனிய எளிய நவீன நடையில் பா வடிவில் எழுதப்பட்டிருக்கின்றனர் இவர்களின் அருந்தொண்டை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

"தொழிலாளர் மித்திரன்"

ஆசிரியர்: காஞ்சி கலியாணசுந்தரம்.

விலை 0-1-0.

கிடைக்குமிடம்: மானேஜர், செட்டித் தோட்டத்து வீதி, பாண்டிச்சேரி. (F. I.)

இருவாரத்திற்கு ஒருமுறை வெளிவரும் மேற்படி இதழ் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. இதன் ஆசிரியரை தமிழ்நாட்டார் நன்கு அறிந்திருப்பார்கள். இதைக் குறித்து எடுத்துக் காட்டுவது வீண் வேலையாகும். "தொழிலாளர் மித்திரனி"ன் நோக்கங்கள் பாராட்டக்கூடியவைகளாக இருக்கின்றன. அடக்கப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர், இழிவுபடுத்தப்பட்டோர், வஞ்சிக்கப்பட்டோர், ஆகியவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதுதான் இதன் நோக்கம் என்று தெரிகிறது. இதன்படி 'மித்திரன்' உழைக்குமானால் பெரும்பாலான மக்களின் ஆதரவைத் தானே பெறும் என்பதில் ஐயமில்லை.

"குடி அரசு" பதிப்பக
வெளியீடுகள்

3 அணா புத்தகங்கள்

இராமாயண பாத்திரங்கள்
இரண்டு வழிகள் (இங்கர்சால்)
சீர்திருத்த மார்க்கம் („)
மேயோகூற்று மெய்யா பொய்யா?
புராண ஆபாசங்கள் (தர்மபரீட்சை)
பேய்-பூதம்-பிசாசு
மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன
மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்
பிரபஞ்சஉற்பத்தி
நான் ஏன் கிறிஸ்தவனல்ல?
நான் சம்சயவாதி ஆனதேன்?
பொதுவுடைமைத் தத்துவங்கள்
தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி
மறுப்புக்கு மறுப்பு (சாமி வேதாசல குறிப்பு)

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 12, Cemetery street, Erode